**அ.வ.எண்: 20/2017 நாள்: 09.02.2024**

வா.சா.1 சுசி

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :-</u>

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் என்ன வேலை பார்த்து வருகிறேன் என்றால் கட்டிட வேலை பார்க்கிறேன். 1ம் வாதி பாப்பு என் தாயார் என்றால் சரிதான். பிராதில் சொல்லியுள்ள விவரங்களை யார் சொன்னால் என்றால் என் தாயார் வழக்கறிஞருக்கு சொன்னார். எதிர்வழக்குரையை பார்த்துள்ளேனா என்றால் எதிர்வழக்குரை மற்றும் ஆவணங்களையும் பார்த்துள்ளேன். வழக்கு தாக்கல் செய்யும் போது சர்வேஎண்.258/3ஏ மட்டும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சொன்னால் 2 சர்வே எண்களை கொடுத்தோம் ஆனால் 1 சர்வே எண் விடுபட்டுவிட்டது.

2. தாவாச் சொத்துக்கள் எங்களுக்கு பூர்வீக பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். ஆனால் மேற்படி சொத்துக்களை ஏலத்திலிருந்து எனது பூட்டி வெள்ளச்சி மீட்டார். வா.சா.ஆ.1 ஆன தீர்வைப் பட்டாவில் தாவா 2வது இலக்கச் சொத்தில் சர்வே எண் இல்லை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.2ல் எந்த விதமான சர்வே எண்களும் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆன பட்டா மாறுதல் உத்தரவில் தாவாச் சொத்தின் சர்வே எண் உள்ளதா என்றால் உள்ளது.

3. தாவாச் சொத்துக்கள் ஆதியில் வெள்ளச்சி என்பவருக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரிதான். வெள்ளச்சிக்கு எத்தனை குழந்தைகள் இருந்தது என்றால் வேலன் மற்றும் அம்மாசி என்ற ஆண் வாரிசுகளும் பழனி,பேச்சி, வேணி என்ற பெண்களும் வாரிசுகள் உள்ளார்கள். எதிர் வழக்குரையில் குறிப்பிட்டுள்ள வாரிசு விபரங்கள் சரியானதா என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. எனது தாயார் முன்னோர்கள் இந்து கூட்டுக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். எனது கணவர் பெயர் என்ன என்றால் பிரான்சிஸ் அவர் கிறிஸ்தவ மதத்தை சேர்ந்தவர். நான் திருமணத்திற்கு பின்னர் கிறிஸ்தவ மதத்திற்கு மாறிவிட்டேன்.

4. தாவாச் சொத்துக்களை தவிர வேறு பூர்வீக சொத்துக்கள் உள்ளதா என்றால் எனது தாயார் பெயரில் உள்ளது. மேற்படி சொத்துக்கள் சம்பந்தமான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால்

தாக்கல் செய்துள்ளேன். அம்மாசி என்பவா எனது தாயாரின் தகப்பனாா. அம்மாசி என்பவருக்கும் 1ம் பிரதிவாதியின் கணவரும் 2ம் பிரதிவாதியின் தகப்பனாருமான கருப்பன் என்பருக்கும் இடையே பட்டா மாறுதல் சம்பந்தமாக வருவாய் நீதிமன்றங்களில் வழக்கு நடந்ததா என்றால் நான் சிறு குழந்தையாக இருக்கும்போது வழக்கு நடந்தது. அம்மாசி என்பவர் நான் சுமார் 20, 25 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார்.

5. தாவாச் சொத்து எனது தாயாருக்கு மட்டும் எப்படி பாத்தியப்பட்டது என்றால் அம்மாசியின் பங்கை எனது தாயாருக்கு கொடுக்கப்பட்டது. அம்மாசி 3 பெண் குழந்தைகள் உள்ளனர். அவர்கள் பெயர் பாப்பு, காளிமுத்து, பஞ்சவள்ளி. அம்மாசி இறந்த பின்னர் தான் என் தாயாருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அம்மாசி என் அம்மா பெயருக்கு எந்த ஆவணமும் எழுதி வைக்கவில்லை என்றால் சரிதான். பாப்பு, காளிமுத்து, பஞ்சவள்ளி ஆகியோர்கள் அம்மாசியின் சொத்தை பிரித்துக் கொண்டார்களா என்றால் எனது அம்மா மட்டும் தான் என் தாத்தா அம்மாசி வீட்டில் இருந்தார் மற்ற 2 பேரும் திருமணமாகி வெளியூருக்கு சென்றுவிட்டார்கள். காளிமுத்து தொண்டியில் உள்ளார். பஞ்சவள்ளி திருதேர்வளையில் உள்ளார். அவர்களை ஏன் இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் அவர்கள் இருவரும் எனது அம்மாவிற்கு சொத்தை மாற்றி எழுத்துப்பூர்வமாக கொடுத்துவிட்டார்கள். மேற்படி எழுத்துப் பூர்வமான ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை.

6. தாவாச் சொத்தின் கணினி பட்டா என் பெயரில் உள்ளது என்றால் சரிதான். தாவாச் சொத்தை பிரதிவாதிகள் விவசாயம் செய்து வருவதால் அவர்களுக்கு எதிராக புகார் கொடுத்தேனா என்றால் புகார் கொடுத்துள்ளேன். எங்கள் சொத்தை பிரதிவாதிகள் விவசாயம் செய்தார்கள். அதனால் முதலில் வருவாய் கோட்டாட்சியரிடம் மனு கொடுத்தார்கள். அதன்பின்னர் இந்த வழக்கை தாக்கல் செய்தேன். பட்டா என் பெயரில் இருந்தாலும் தாவாச் சொத்தை பிரதிவாதிகள் அனுபவம் செய்து வருவதால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

7. 1ம் பிரதிவாதியின் கணவர் வருவாய் கோட்டாசியர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலரிடம் வழக்கு நடத்தி அவர்களுக்கு சாதகமாக உத்தரவை பெற்றுள்ளார்கள் என்று சொன்னால் நான் சிறு குழந்தையாக இருந்ததால் எனக்கு விபரம் தெரியவில்லை. தாவாச் சொத்தை அனுபவம் செய்து

வந்ததற்கான வரி ரசீதை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் சிறு குழந்தையாக இருக்கும் போது கட்டிய ரசீது உள்ளது. பிரதிவாதிகள் எங்களுக்கு பங்காளிகள் என்று சொன்னால் சரிதான்.

8. வழக்குச் சொத்துக்களை எனது முன்னோர்களே பாகப் பிரிவினை அனுபவம் செய்து வந்தார்கள் என்றும் அதன்படி தாவாச் சொத்துக்கள் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. நான் வழக்குச் சொத்தை அனுபவம் செய்யவில்லை என்றால் சரிதான். எனது சிறு வயது முதலே எனக்கு விபரம் தெரியாததால் பிரதிவாதிகள் அனுபவம் செய்து வருகிறார்கள். தாவாச் சொத்துக்கள் எந்த காலத்திலும் பாத்தியம் மற்றும் அனுபவம் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. தற்போது தாவாச் சொத்துக்களுக்கு கணினி 10(1)ல் தவறுதலாக எனது பெயரில் பட்டா உள்ளதை பயன்படுத்தி சொத்தை அபகரிக்க வேண்டுமென்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்குச் சொத்து மற்றும் அதன் தொடர்புடைய ஆவணங்கள் அனைத்தும் கேள்விப் பட்டுதான் தெரியும் என்று சொன்னால் சரிதான். நிரூபணவாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் அனைத்தும் தாயார் சொல்லித்தான் தெரியும் என்றால் சரிதான். மேலும் எனக்கு சிறுபிள்ளையாக இருக்கும் போதிலிருந்தே தெரியும்.

**மறுவிசாரணை:** இல்லை.

**S/d.R.M.மாரிமுத்து, பி.ஏ.பி.எல்..**
மாவட்ட உரிமையியல் நீதிபதி,(மு.கூ.பொ)
தேவகோட்டை.